Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.881/2019 |
| Police station | : | Thookkanampakkam P.S |
| Deposition of witness for Prosecution | : | LW 5/ PW 4 |
| Name | : | தமிழரசன் |
| Father Name/Husband Name | : | தேவலிங்கம் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 09.06.2023 நாளாகிய இன்று திருமதி.L.வனஜா, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர். ).

**<u>முதல் விசாரணை</u>:**

1. நான் தற்போது ராசாப்பாளையத்தில் வசித்து வருகிறேன். டிரைவர் வேலை செய்து வருகிறேன். அசா1 தமிழரசன் என்பவரை தெரியும். ஆஜர் எதிரி எனக்கு தம்பி ஆவார். தேதி சரியாக ஞாபகம் இல்லை. கடந்த 6 வருடங்களுக்கு முன்பு விபத்து நடந்ததாக தமிழரசன் என்பவர் போன் மூலம் தகவல் சொன்னார். நல்லாத்தூரில் உள்ள ஹாலோ பிளாக் கல் செய்யும் இடத்தில் இருச்சக்கர வாகனத்தில் சென்றபோது கீழே விழுந்து விபத்து ஏற்பட்டதாக சொன்னார். நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தபோது மூன்று பேரும் அடிப்பட்டு கீழே இருந்தார்கள். நான் அவர்களை கரிக்கலாம்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக புதுவை ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். வேறு எதுவும் தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

1. விபத்த நடந்தயிடத்திற்கு 20 நிமிடத்தில் சென்றுவிட்டேன். நான் அங்கு செல்வதற்கு முன்பே பொது மக்கள் கூடிவிட்டார்கள். அடிப்பட்டவர்கள் மயங்கியிருந்தார்கள். விபத்து எப்படி நடந்தது என்று அப்போது எனக்கு தெரியாது.

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.881/2019 |
| Police station | : | Thookkanampakkam P.S |
| Deposition of witness for Prosecution | : | LW 6/ PW 5 |
| Name | : | அழகநாதன் |
| Father Name/Husband Name | : | கேசவன் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 09.06.2023 நாளாகிய இன்று திருமதி.L.வனஜா, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர். )

**<u>முதல் விசாரணை</u>:**

1. நான் தற்போது பள்ளிப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 01.05.2018 அன்று நானும், கர்ணன் என்பவரும் நல்லாத்தூரில் இருந்து பள்ளிப்பட்டிற்கு வந்துக்கொண்டிருந்தபோது விபத்து நடந்தயிடமான அன்னை ஹாலோ பிளாக் கம்பெனி அருகே விபத்து நடந்தயிடத்தை பார்வையிட்டு தூக்கணாம்பாக்கம் போலிசார் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தனர். பார்வை மகசரில் நானும் என்னுடன் வந்த கர்ணன் என்பவரும் கையெழுத்து போட்டோம். **(சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய பார்வை மகசர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

1. இரண்டு நாட்கள் கழித்து விபத்து நடந்தயிடத்திற்கு போலிசார் வந்திருந்தார்கள். இரண்டு பேப்பரில் நான் கையெழுத்து போட்டேன். ஒரு கையொப்பம் வரைபடத்திலும், ஒரு கையொப்பம் எழுதிய பேப்பரிலும் போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. விபத்தில் இறந்துபோன நபர் எனது உறவினர். விபத்தில் இறந்த நபர் தங்களின் உறவினர் என்பதால் நஷ்டயீடு பெறுவதற்காக மேற்கண்ட கையொப்பத்தினை காவல் நிலையத்தில் போட்டுவிட்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.881/2019 |
| Police station | : | Thookkanampakkam P.S |
| Deposition of witness for Prosecution | : | LW 7/ PW 6 |
| Name | : | கர்ணன் |
| Father Name/Husband Name | : | காசிநாதன் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 09.06.2023 நாளாகிய இன்று திருமதி.L.வனஜா, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்கள்ால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பள்ளிப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். பள்ளிப்பட்டில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 01.05.2018 அன்று நானும், என் மாமா அழகாநந்தம் என்பவரும் நல்லாத்தூரில் இருந்து பள்ளிப்பட்டிற்கு வந்துக்கொண்டிருந்தபோது விபத்து நடந்தயிடமான அன்னை ஹாலோ பிளாக் கம்பெனி அருகே விபத்து நடந்தயிடத்தை பார்வையிட்டு தூக்கணாம்பாக்கம் போலிசார் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தனர். பார்வை மகசரில் நானும் என்னுடன் வந்த என் மாமா அழகாநந்தம் என்பவரும் கையெழுத்து போட்டோம். **(சாட்சியின் கையெழுத்து மட்டும் அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. நான் ஒரு கையெழுத்து தான் போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. என்னை ஆய்வாளர் விசாரித்தார். வரைபடம் வரையும்போது விசாரித்தனர் அதற்கு பிறகு விசாரிக்கவில்லை. இறந்த நபர் எனக்கு உறவினர். விபத்தில் இறந்த நபர் தங்களின் உறவினர் என்பதால் நஷ்டயீடு பெறுவதற்காக மேற்கண்ட கையொப்பத்தினை காவல் நிலையத்தில் போட்டுவிட்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.